பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
22 03 2025 **SATURDAY** 7 15 **AM**
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மக்கள் நீதிமன்றங்களால் நீண்டகாலமாக நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை குறைந்துள்ளதாக மத்திய சட்ட அமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மெக்வால் கூறியுள்ளார்.

2. விவசாயத்திற்கு தேவையான உரம் கையிருப்பில் உள்ளதை மத்திய அரசு உறுதிப்படுத்தி வருவதாக மத்திய ரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

3. மக்களவைத் தொகுதி மறுவரையறை குறித்து எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களின் முதலமைச்சர்கள் இன்று சென்னையில் ஆலோசனை நடத்தவுள்ளனர்.

4. விசாகபட்டிணம் இரும்பு உருக்காலையை புதுப்பிக்க 14 ஆயிரத்து 400 கோடி ரூபாய் நிதி ஒதுக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

5. ஐபிஎல் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது. முதல் ஆட்டத்தில் கொல்கத்தா அணி – பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது

**>>>>><<<<<**

நாடுமுழுவதும் நடத்தப்படும் மக்கள் நீதிமன்றங்களால் நீண்டகாலமாக நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை குறைந்துள்ளதாக மத்திய சட்ட அமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மெக்வால் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் நேற்று கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், மக்கள் நீதிமன்றங்களுக்கு சட்டபூர்வ அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளதாகவும், இந்த நீதிமன்றங்களின் உத்தரவு சிவில் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு இணையானது என்றும் அவர் தெரிவித்தார்.

எந்தவொரு நீதிமன்றத்திலும் இந்த தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்ய முடியாது என்றும் அவர் கூறினார்.

கடந்த ஐந்தாண்டுகளில் நாடுமுழுவதும் நடத்தப்பட்ட மக்கள் நீதிமன்றங்கள் மூலம் லட்சக்கணக்கான வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

2024-25ஆம் நிதியாண்டில் மாநில மக்கள் நீதிமன்றங்கள் மூலம் 12 லட்சத்து 8 ஆயிரத்து 227 வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

தேசிய மக்கள் நீதிமன்றங்கள் மூலம், கடந்த ஆண்டு நாடுமுழுவதும் பத்து கோடியே 45 லட்சத்து 26 ஆயிரத்து 119 வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் திரு. அர்ஜுன்ராம் மெக்வால் தெரிவித்தார்.

>>>>><<<<<

ஒவ்வொரு பயிர் சாகுபடி பருவம் தொடங்கப்படுவதற்கு முன்பு தேவையான உரம் கையிருப்பில் இருப்பதை மத்திய அரசு உறுதிப்படுத்தியிருப்பதாக மத்திய ரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

மக்களவையில் நேற்று கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், பயிர் பருவம் தொடங்குவதற்கு முன்பு, மத்திய வேளாண்துறை, மாநில அரசுகளுடன் கலந்து ஆலோசித்து மாநிலம் வாரியாக தேவைப்படும் உரத்தை மதிப்பீடு செய்து வழங்குவதாக கூறினார்.

தேவையின் அடிப்படையில் மாதந்தோறும் உரம் விநியோகம் செய்யப்படுவதாகவும், இதுவரை மாநிலங்களுக்கு போதுமான உரங்களை மத்திய அரசு ஒதுக்கி வரவதாகவும் அவர் தெரிவித்தார்.

மானியத்துடன் கூடிய அனைத்து உரங்களும் விவசாயிகளுக்கு கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், அதன் விலையை மத்திய அரசு கண்காணித்து வருவதாகவும் அவர் கூறினார்.

மலிவு விலையில் யூரியா உரத்தை உறுதி செய்வதற்காக யூரியா மானிய திட்டத்தின் கீழ், 45 கிலோ எடை கொண்ட ஒரு மூட்டை 242 ரூபாய்க்கு விவசாயிகளுக்கு வழங்கப்படுவதாகவும் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்தார்.

>>>>><<<<<

பிரதமரின் ஆயுள் காப்பீட்டு திட்டத்தில், வேலூர் மாவட்டத்தில் சுமார் 3 லட்சத்து 50 ஆயிரம் பேர் இணைந்துள்ளனர்.

குறைந்த வருமானம் பெறக்கூடியவர்களுக்கு இந்த திட்டம் பயனளிப்பதாக உள்ளது என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - மோகன் - பயனாளிகள் 45 செகண்ட்ஸ்)

துயரமான காலகட்டத்தில் இத்திட்டம் தங்களின் குடும்பத்திற்கு உதவியாக இருந்ததாக பயனாளிகள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - பயனாளிகள் 30 செகண்ட்ஸ்)

**>>>>><<<<<**

இந்தியாவும் மங்கோலியாவும் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த ஒப்புக் கொண்டுள்ளன.

புதுதில்லி வந்துள்ள மங்கோலியாவின் வெளியுறவுத்துறை செயலர் திரு. **Munkhtushig,** வெளியுறவுத்துறை அமைச்சக செயலாளர் திரு. **Jaideep Mazumdar** –ரை நேற்று சந்தித்துப் பேசினார்.

இருநாடுகளுக்கு இடையிலான யுக்திசார் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது மற்றும் உயர்மட்ட அளவில் பேச்சுக்களை நடத்துவது குறித்து இருதரப்பினரும் விவாதித்தனர்.

கல்வி, தகவல் தொழில்நுட்பம், எரிசக்தி, கலாச்சாரம், திறன் மேம்பாடு, சுரங்கம், பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது குறித்தும் இருதரப்பினரும் ஆலோசனை நடத்தினர்.

இந்தியா – மங்கோலியா இடையே தூதரக உறவுகள் ஏற்பட்டு 70 ஆண்டுகள் நிறைவடைவதை குறிக்கும் வகையில் தொடர்ச்சியாக ஓராண்டுக்கு நிகழ்ச்சிகளை நடத்தவும் இருதரப்பினரும் ஒப்புக் கொண்டனர்.

**>>>>><<<<<**

மக்களவைத் தொகுதி மறுவரையறை குறித்து எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களின் முதலமைச்சர்கள் இன்று சென்னையில் ஆலோசனை நடத்தவுள்ளனர்.

மக்கள்தொகையை கட்டுப்படுத்திய மாநிலங்களில் தற்போதுள்ள மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை குறைக்கக்கூடாது என்று தமிழ்நாடு, கேரளா, மேற்குவங்கம் உள்ளிட்ட மாநிலங்கள் வலியுறுத்தி வருகின்றன.

இதுதொடர்பாக தமிழக அரசு இன்று சென்னையில் ஏற்பாடு செய்துள்ள ஆலோசனைக் கூட்டத்தில் கேரளா, தெலங்கானா, கர்நாடகா, பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களின் முதலமைச்சர்கள் மற்றும் எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளின் தேசிய தலைவர்களும் பங்கேற்கின்றனர்.

**>>>>><<<<<**

விசாகபட்டிணம் இரும்பு உருக்காலையை புதுப்பிக்க 14 ஆயிரத்து 400 கோடி ரூபாய் நிதி ஒதுக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

ஆலையின் உற்பத்திப் பிரிவை நவீனமயமாக்கவும், தற்போதுள்ள ஆலையின் கட்டமைப்பு வசதிகளை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளவும் இந்த நிதி உதவும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

தேசிய உருக்கு கொள்கையின் கீழ், ஆலையின் உற்பத்தித் திறனை மேம்படுத்தவும் இந்த நிதி பயன்படும் என்று மாநிலங்களவையில் மத்திய உருக்கு மற்றும் கனரக நிறுவனங்கள் துறை இணையமைச்சர் திரு. பூபதிராஜு சீனிவாச வர்மா கூறினார்.

**>>>>><<<<<**

லண்டனில் பரபரப்பான **Heathrow** விமான நிலையத்தின் அருகில் உள்ள துணைமின்நிலையத்தில் நேற்று ஏற்பட்ட தீ விபத்து காரணமாக, விமான நிலையம் மூடப்பட்டதால், விமானச் சேவை பாதிக்கப்பட்டது.

விமான நிலையத்திற்கு வரும் விமானங்களும், மற்ற விமான நிலையங்களுக்கு திருப்பிவிடப்பட்டன.

விமான நிலையத்திலிருந்து புறப்பட வேண்டிய விமானங்களும் காலதாமதமாக புறப்பட்டுச் சென்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தீ அணைக்கப்பட்டுவிட்டதை அடுத்து, விமானப் போக்குவரத்து மீண்டும் தொடங்கியுள்ளது.

பிற ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்த விமானங்கள் முதலில் தரையிறங்க அனுமதிக்கப்பட்டன.

பல்வேறு நாடுகளுக்கான விமானங்களின் இயக்கமும் சீரடைந்து வருவதாக **Heathrow** விமான நிலையத்தின் தலைமை நிர்வாகி திரு. **Thomas Woldbye** தெரிவித்துள்ளார்.

**>>>>><<<<<**

ஐபிஎல் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

கொல்கத்தாவில் இன்று மாலை மணி 7.30-க்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் கொல்கத்தா அணி – பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

இந்த ஆண்டு ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில், 10 அணிகள் பங்கேற்கின்றன.

ஒவ்வொரு அணியும் தலா 14 லீக் ஆட்டங்களில் விளையாடும் வகையில் போட்டி அட்டவணை அமைக்கப்பட்டுள்ளது.

லீக் போட்டியின் முடிவில் புள்ளி பட்டியலில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள், ப்ளேஆப் சுற்றுக்கு முன்னேறும்.

இந்நிலையில், கோவை, நெல்லை, திருச்சி, மதுரை உள்ளிட்ட நகரங்களில் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஐபிஎல் கிரிக்கெட் போட்டிகளை பொதுமக்கள் பெரிய திரைகளில் காண தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் ஏற்பாடு செய்துள்ளது.

**>>>>><<<<<**

ஸ்விட்சர்லாந்து ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதிக்கு இந்தியாவின் **Treesa Jolly – Gayathri Gopichand** இணை முன்னேறியுள்ளது.

**Basel** நகரில் நேற்று நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் இந்த இணை 21-18, 21-14 என்ற செட்கணக்கில் ஹாங்காங்கின் **Yeung Nga Ting – Yeung Pui Lam** இணையை வென்றது.

இன்று நடைபெறவுள்ள அரையிறுதியாட்டத்தில் இந்திய இணை – சீன இணையை எதிர்கொள்கிறது.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிப் போட்டியில் இந்தியாவின் சங்கர சுப்பிரமணியன், பிரான்ஸின் கிறிஸ்டோ பப்போவிடம் தோல்வியடைந்தார்.

மற்ற இந்திய வீரர்கள் அனைவரும் காலிறுதிக்கு முந்தைய சுற்றிலேயே தோல்வியடைந்து போட்டியிலிருந்து வெளியேறினர்.

>>>>><<<<<

புதுதில்லியில் நடைபெற்று வரும் கேலோ இந்தியா பாரா விளையாட்டுப் போட்டிகளில் நேற்று தடகளம், பேட்மிண்டன் போட்டிகள் கவனத்தை ஈர்த்தன.

நேற்று நடைபெற்ற தடகள போட்டியில், தமிழகத்தின் **Ramesh Shanguman** ஆடவர் 800 மீட்டர் மற்றும் 100 மீட்டர் ஓட்டத்தில் தங்கப்பதக்கங்களை வென்றார்.

குண்டு எறிதல் போட்டியில் ரவி ரங்கோலி தங்கப்பதக்கத்தையும், அபிஷேக் வெள்ளிப்பதக்கத்தையும், மனோஜ் சிங்கராஜா வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

இதுவரை நடைபெற்றுள்ள போட்டிகளில் தமிழ்நாடு 9 தங்கப்பதக்கங்களுடன் முதலிடத்தில் நீடிக்கிறது.

ஹரியானா 7 பதக்கங்களுடனும், உத்தரபிரதேசம் 5 பதக்கங்களுடனும் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தில் உள்ளன.

>>>>><<<<<

சென்னையில் நேற்று நிறைவடைந்த அகில இந்திய காவல்துறை துப்பாக்கிச் சுடும் போட்டியில் ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் கோப்பையை அஸ்ஸாம் ரைபில்ஸ் அணியும், இரண்டாவது இடத்தை எல்லைப் பாதுகாப்புப்படை அணியும், மூன்றாவது இடத்தை அஸ்ஸாம் மாநில காவல்துறை அணியும் கைப்பற்றின.

போட்டிகளில் வெற்றிபெற்ற அணிகளுக்கு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் கோப்பைகளையும், பரிசுகளையும் வழங்கி பாராட்டினார்.

>>>>><<<<<

தூத்துக்குடியில் நேற்று நிறைவடைந்த துறைமுகங்களுக்கு இடையேயான கபடி போட்டியில், சென்னை துறைமுகம் சாம்பியன் கோப்பையை வென்றது.

நேற்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் சென்னை அணி 47-41 என்ற புள்ளிக்கணக்கில் மும்பை துறைமுக அணியை வென்றது.

தூத்துக்குடி துறைமுகம் 3வது இடத்தையும், பாராதீப் துறைமுகம் 4-வது இடத்தையும் பிடித்தன.

**>>>>>END<<<<<**